## தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
## மயிலாடுதுறை

அ.சா.20 நாள் 27.11.2025

| | | | |
|---|---|---|---|
| CC. No. | 294/2025 | | |
| பெயர் | மதிவாணன் | க/பெ. | சிதம்பரம் |
| வயது | 73 | தொழில் | - |
| கிராமம் | சென்னை / நங்கநல்லூர் | தாலுக்கா | சென்னை |

(எதிரிகள் ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் கூட்டுறவு சார்பதிவாளராக/களஅலுவலர் பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். நான் கொண்டல் கூட்டுறவு சங்கத்தில் மார்ச் 2012லிருந்து 08.07.2012 வரை சுமார் நான்கு மாதத்திற்கு கூடுதல் பொறுப்பு தனிஅலுவலராக இருந்தேன். அப்போது அந்த கொண்டல் கூட்டுறவு சங்கத்தின் முறைகேடு சம்மந்தமாக விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார். அவரிடம் 27.12.2011 முதல் 31.12.2011 வரை கொடுக்கப்பட்ட 20 கடன்களுக்கும் Abstract-ல் அப்போதிருந்த தனிஅலுவலர் கையெழுத்து போடாமல் அதில் மத்திய கூட்டுறவு வங்கி கணக்குடன் ஒத்திசைவு செய்ததில் விடுபட்டு இருந்ததாக என்னிடம் கையெழுத்து கேட்டதால், நான் சிட்டா, அடங்கலை செயலர் கல்யாணம் காணப்பித்ததை பார்வையிட்டு அது சரியாக இருந்தபின் மத்திய கூட்டுறவு வங்கி கொடுக்கக்கூடிய Abstract-ல் நான் கையெழுத்திட்டேன். கூட்டுறவு விசாரணை அதிகாரியிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.8** ஆகும். என்னிடம் விசாரணை அதிகாரி காண்பித்த 27.12.2011 முதல் 31.12.2011 வரையிலான கடன் எண்கள். 1424 முதல் 1444 வரையிலான கடன்களுக்குண்டான ஜெராக்ஸ் சிட்டா அடங்கலில் நான் குறிப்பிட்ட குறிப்பு இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

27/11/25

CJM, MAYILADUTHURAI.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

நான் 27.12.2011 முதல் 31.12.2011 வரை செயலாளர் கல்யாணம் கொடுத்த நகைக்கடன் சரியாக கொடுக்கப்பட்டுள்ளது என்று ஆவணங்களை பார்வையிட்ட பிறகுதான் சிட்டா, அடங்கல் மற்றும் வி.ஏ.ஓ சான்றிதழ் உள்ள படிவத்தில் நான் கையெழுத்திட்டேன். அப்போது இருந்த தனிஅலுவலர் கையெழுத்து போடாததால் நான் அதை சரிபார்த்து கையெழுத்து போட்டேன். பொதுவாக தனிஅலுவலர் கையெழுத்திட்ட பின் உதவி களமேலாளர், களமேலாளர், கிளை உதவியாளர், கிளை மேலாளர் ஆகியோர்கள் ஆவணங்களை சரிபார்த்து அதன் பிறகு தான் கடன் கொடுப்பதற்கு உத்தரவு வழங்கப்படும். தனிஅலுவலர் மற்றும் மேற்சொன்ன அதிகாரிகள் கையெழுத்து போட்ட பின்பு தான் மத்திய கூட்டுறவு வங்கி அதனை சரிபார்த்து கடன் வழங்குவார்கள். அந்த அசல் ஆவணங்கள் அனைத்து மத்திய கூட்டுறவு வங்கியில் தான் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விசாரணை அதிகாரி என்னிடம் நகலைத்தான் காண்பித்தார். அந்த 20 நகைக்கடன்களுக்கு கொடுக்கப்பட்ட ஆவணங்களில் எந்தவித முறைகேடும் நடக்கவில்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

27/1/25

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

27/1/25

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.